# THE EFFECT OF DOWRY IN HINDU WEDDING: A RESEARCH BASED ON EASTERN PROVINCE

Navaretnam Subaraj[1]

Correspondence: subaraj84@seu.ac.lk

**Abstract**

Dowry is well known as a gift for bridegroom like giving house, Land, money, golden jewels and vehicle from the house of bride who is going to get married (Rani Jethmalani & Dey, 1995). 'Giving dowry' is considered as a very important event in Hindu wedding. But the bride's family is only party who are mostly affected by this dowry. So that the challenges and problems are mostly faced by bride's side. Commonly dowry plays a vital role in different kind of society. However this study focuses on the impact of dowry in Hindu Society. The aim of this study was to discover the reason for increasing dowry system in Hindu Society and to find the vulnerable party of this dowry system. This research is an inductive as it gives a common result which is about the impact of dowry in women marriage life through the data from individual samples in research area. This is a qualitative research and also it is a quantitative research because it considers about assets details of affected women. This research is carried out based on primary data. The data collected through the questionnaire and personal interview were used for this research. In addition books and articles were used as secondary data. It is an analytical and descriptive research. 300 families in Eastern province of Sri Lanka were selected using simple random sampling method. This dowry is a status and separate property of rich people. It is being an unbrokenly beast for normal class people. So dowry appears as a big reason for violence against women. There must be many advertisements published to eradicate this stupid tradition. 'No need to give and get dowry' this new practice must be established speedily. It must be established wisely considering the opinions of not only women but also men who care about the society in order to make a change.

**Keywords:** Dowry, Hindu wedding, Women, Vulnerable party, Violence, Eastern Province

## 1.1 அறிமுகம்

இந்துக்களின் திருமண நடைமுறைகளில் சீதனம் வழங்குதல் முக்கியமானதொரு நிகழ்வாகவே கருதப்படுகின்றது. ஆனால் இந்து மத மூல இலக்கியங்கள் எவற்றிலும் சீதனம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. காலத்திற்கு காலம் மனிதர்கள் தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே சீதனம் எனும் வரன்முறையை அமைத்துக் கொண்டனர். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை சீதனம் வழங்குதல் பெரும்பாலான இடங்களில் இடம் பெற்று வருகின்றது. இங்கு இந்துக்களின் திருமணங்களில் இச்சீதனம் வழங்கும் நிகழ்வு அவர்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

[1] Department of Languages, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka

**1.2 ஆய்வின் நோக்கங்கள்**

சீதனம் என்பது எழுதப்படாத ஆனால் நடைமுறையில் உறுதியாகவுள்ள ஒரு வழமையாகும். இது ஒரு சம்பிரதாயத்திற்காகச் செய்யப்படுகின்றதெனில் அது பற்றிய தேடல் மிகப்பெரிய பயனைத் தருகின்றதெனக் கூறிவிடமுடியாது. சம்பிரதாயத்திற்கப்பால் பெண் வர்க்கத்தினரின் சமூகப் பிரச்சினையாக அது மாறிச் செல்கின்றது. சீதனம் என்ற பெயரில் ஆண் குடும்பத்தார் பெண் குடும்பத்தார் மீது கொடுக்கும் அழுத்தம் அக்குடும்பத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குரியதாக்குகின்றது. இதனை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**1.3 ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் இந்துக்கள் மத்தியில் சீதன வழமை அதிகரித்துள்ளமைக்கு காரணம் வறுமையா அல்லது போலிக் கௌரவக் கொள்கையா அல்லது சுகபோக வாழ்க்கைக்கா அல்லது வேறு எவையேனும் காரணங்கள் தாக்கம் செலுத்துகின்றனவா? என்பது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றது.

**1.4 ஆய்வு எல்லை:**

அம்பாறை மாவட்டத்தில் இந்துக்கள் அதிகமாக வசிக்கும் காரைதீவு, பனங்காடு, கல்முனை ஆகிய பிரதேசங்கள் இவ்வாய்விற்கான மாதிரிகளை தெரிவு செய்வதற்கான பிரதேசங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**1.5 ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வில் முதனிலைத் தரவுகள், வழிநிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று மேற்கொள்ளப்படும் நேர்காணல், வினாக்கொத்து ஆய்வு மற்றும் களவாய்வு என்பன மூலம் பெறப்படும் தரவுகள் முதனிலைத் தரவுகளாகவும், இந்துக்களின் சீதனம் வழங்கல் நடைமுறை, திருமணம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை மற்றும் இணையத்தளச் செய்திகள் என்பன வழிநிலைத் தரவுகளாகவும் கொள்ளப்படவுள்ளன.

**1.6 ஆய்வின் மையம்**

**அம்பாறை மாவட்டம்**

கிழக்கிலங்கையில் அமைந்துள்ள மாவட்டங்களுள் அம்பாறை மூவின மக்களும் செறிந்து வாழுமிடமாகும். முஸ்லிம்கள் 44.0 சதவீதத்தினரும் சிங்களவர்கள் 37.5 சதவீதத்தினரும் இலங்கைத் தமிழர்கள் 18.3 சதவீதத்தினரும் இங்கு வாழ்கின்றனர். 1961ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்திருந்த அம்பாறை பின்பு பதுளை மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கி தனியொரு மாவட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. அதற்கு முன்பு இவ்விரு மாவட்டங்களையும் இணைத்து மட்டக்களப்புத் தேசம் என்றே அழைத்து வந்துள்ளனர்.

எனவே தற்போதயை அம்பாறை மாவட்டத்தின் இந்துப்பண்பாடு மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பண்பாட்டையே பெரிதும் ஒத்திருக்கின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் அனைத்து சடங்குகளும் இவ்விரு மாவட்டங்களில் ஒத்ததாகவே அமைந்திருக்கின்றன.


**ஆய்வுப்பிரதேசமும் இந்துக்களின் சீதன வழமையும்**

அம்பாறை மாவட்டத்தில் இந்துக்கள் அதிகமாக வசிக்கும் காரைதீவு, பனங்காடு, கல்முனை ஆகிய பிரதேசங்கள் இவ்வாய்விற்கான மாதிரிகளை தெரிவு செய்வதற்கான பிரதேசங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆய்வு மாதிரிகள் முழுவதையும் எடுத்து நோக்கும் போது இந்துப் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுள் ஒன்றாக சீதனம் அல்லது வரதட்சனை காணப்படுகின்றது. திருமண பந்தத்தில் ஈடுபடவுள்ள குறித்த பெண்ணுக்கு அவரது வீட்டில் இருந்து பெற்றோர், சகோதரர்கள் அல்லது உறவினர்களால் சம்பந்தப்படப் போகும் ஆணுக்குப் வீடு, நிலம், பணம், தங்க நகைகள், பாவனைப் பொருட்கள், வாகனங்கள் என்பனவற்றைத் தொகையளவில் அன்பளிப்பாக வழங்கப்படும் நடைமுறையாக இங்கு சீதனம் காணப்படுகின்றது.

பெண்களுக்கான திருமண நிறைவேற்றத்திற்கு இச்சீதனம் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாக இருந்து வருகிறது. பெண் வீட்டாரால் எதிர்ப்பு தெரிவிக்க முடிவதில்லை. இவ்வழமை திருமணத்தின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டதை இங்கு அவதானிக்க முடிகின்றது. இச் சீதன முறைமை என்பது நிலவுடைமையின் கீழ் ஆணாதிக்க வரம்புகளுக்கு உட்பட்டதாகும். இந்த நடைமுறை சாதியம் போன்று தமிழ்ச் சூழலில் மிகவும் கெட்டியானதாக இருந்து வருகின்றது. பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் தமது இளமைக் காலத் திலிருந்தே இச்சீதனம் கொடுப்பதைத் தமது கடமை என மனதில் வைத்துக் கடும் உழைப்பிலும் சேமிப்பிலும் ஈடுபட்டு வருவது மரபாக எழுதா விதியாகப் பின்பற்றப்படுகிறது.

தமது அன்றாட உணவைக் கூடக் கட்டுப்படுத்தி தமது பெண்களைக் கரை சேர்க்கவெனப் பாடுபடுகின்றனர். தத்தமது ஆண் பிள்ளைகளுக்குப் பெரும் குடும்பப் பொறுப்பு இருப்பதாகச் சிறுவயதில் இருந்தே மூளையில் பதிய வைத்து அக்கா, தங்கைக்கு சீதனம் வழங்குவது ஆண் சகோதரர்களின் தவிர்க்கவியலாத கடமையென விதிக்கப்படுகிறது. தமது பெண் சகோதரர்களுக்கு சீதனம் கொடுப்பதையே லட்சியமாகக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பணம் தேடுவதற்காகக் கடும் உழைப்பில் ஈடுபடும் ஆண்கள் பலர் நாற்பத்தைந்து ஐம்பது வயதாகியும் திருமணம் செய்யாது இருந்து வருவதையும் இங்கு காண முடிகின்றது.

ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வு மாதிரிகளாக நூற்றைம்பது திருமணமான மற்றும் திருமணமாகாத இந்துப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். திருமணமாக பெண்கள் யாவரும் திருமண வயதை தாண்டியவர்களாவர். அதாவது முப்பது வயதை தாண்டியவர்களாவர். ஆய்வுப் பிரதேசத்தில் திருமணத்தின் போது சீதனம் வழங்கியவர்கள் பற்றிய தகவல்கள் பெறப்பட்டன. அவற்றில் 88மூ ஆனோர் மணமகன் வீட்டாருக்கு சீதனம் வழங்கியுள்ளனர். எஞ்சியோர் திருமணத்தில் சீதனம் வழங்காமைக்கான காரணம் அவர்களின் திருமணம் ‘காதல்’ திருமணமாக அமைந்தமையாகும்.




அட்டவணை 1


**சீதனப் பணத்தில் பெண்ணுக்கு தாலி கட்டும் மணமகன்கள்:**

இலங்கைத்தமிழர்கள் மத்தியில் திருமணமென்றால் தங்கத்தாலி மிக அவசியமானதொன்றாக அமைகின்றது. தங்கத்தினால் தாலி அமைக்கப்படாமல் திருமணம் முறையான சடங்குகளுடன் நடத்தப்படுவதில்லை. தங்கத்தினால் தாலி செய்வதற்கு பெண்ணின் பெற்றோர் பணத்தினை தயார் செய்த பின்னரே திருமணத்தினை முறையான சடங்குடன் செய்யத்தலைப்படுகின்றனர். அதுவரை தம்பதிகளாவதற்கான காத்திருப்பில் ஆணும் பெண்ணும் இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் தாலி தயாராகும் வரை பதிவுத் திருமணத்தைச் செய்கின்றனர். பின்பு திருமணச்சடங்கு செய்து தாலியைக் கட்டிக்கொள்கின்றனர்.

இதனால் பெண்வீட்டாருக்கு செலவு வீதம் அதிகரிக்கின்றது. இரு தடவைகள் திருமணத்தை நடத்துகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் மத்தியில் இது வேகமாக பரவியிருக்கின்றது. இதனை ஒரு சமூகநோயாக அடையாளப்படுத்தலாம்.


ஒரு வியாபாரத்தினை சிறந்த முறையில் ஆரம்பித்து வெற்றிகரமாக அதனை முன்னெடுத்துச் செல்ல ஒரு வலுவான மூலதனம் அவசியமாவது போல ஆணும் பெண்ணும் ஆயுள்முழுவதும் இணைந்து வாழ்வதற்கான ஒரு மூலதனமாகவே சீதனம் கருதப்படுகின்றது. ஆனால் இதில் பாதிக்கப்படுவது பெண்வீட்டார் மட்டுமே. உண்மையில் இந்த மூலதனத்தில் ஒருபங்கினை ஆண் எடுக்கும் அதேவேளை இருபங்கினை பெண்வீட்டார் எடுக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. ஆண் உடல் உழைப்பை செய்து குடும்பத்தினை கொண்டு நடாத்துபவன் என்பதனால் இத்தகைய வரன்முறை கூறப்பட்டது. ஆனால் இன்று முழுப்பங்கும் பெண்வீட்டார் எடுத்துக் கொள்வதற்கு உட்படுத்தப்படுவது பொருத்தமற்றதொன்றாகும். அதுமாத்திரமன்றி இன்றைய சமூகத்தில் பெண்களும் தொழில்பெறுநர்களாக அதிகரித்துள்ள நிலையில் சீதனம் அவசியமற்றாக மாறவேண்டும். ஆனால் அதன் தாக்கம் மேலும் வலுவுடையதாகவே மாறிச்செல்கின்றது.

ஆண்வர்க்கத்தின் அடக்குமுறையினதும் ஆணாதிக்கத்தினதும் குறியீடாகவே சீதனம் அமைகின்றது. இச்சீதனத்தின் ஒரு பகுதியாக தாலி அமைவதால் புனிதமான அந்த அடையாளம் இன்று தன்னிலமை இழந்து வருகின்றதோ என்ற வினா எழுகின்றது. திருமணத்தில் தாலிக்கான செலவினை எடுத்துக் கொள்வது பெரும்பாலும் கணவன் அல்லது கணவன் குடும்பத்தாராக உள்ளனர். ஆய்வுப்பிரதசத்தில் கணவனே தாலிக்கான செலவினை எடுத்துக் கொண்டவர் எனக் கூறியோர் 87மூ ஆகும். ஆனால் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் யாதெனில் தாலிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஆண் பெருந்தொகையான சீதனத்தொகையை பெண்வீட்டாரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றான். அதில் சிறுபகுதியை தாலிக்கு ஒதுக்கிக் கொள்கின்றான். ஆய்வுப்பிரதேசத்தில் இத்தகையோர் 85மூ ஆனோர் ஆகும்.




அட்டவணை 2

திருமணத்தில் தாலி தங்கத்தில்தான் செய்யப்பட வேண்டுமென்பதில் இங்குள்ள மக்கள் உறுதியாக உள்ளனர். பெண் வீட்டார் அதற்கான பொருளைத் தேடுகின்ற பொழுது திருமணம் தாமதப்படுகின்றது அல்லது நிறுத்தப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் இதனால் திருமணம் தாமதப்பட்ட குடும்பங்கள் 54மூ உம், நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் 32மூ உம் ஆகும்.





அட்டவணை 3

சீதன முறைமையினால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமன்றி அவர்களது பெற்றோர், சகோதரர்களாகவும் காணப்படுகின்றனர். திருமண வயதை அடைந்துள்ள நிலையில் சீதனம் கொடுக்க வசதியற்ற குடும்பச் சூழலில் முதிர்கன்னியர் என்ற நிலையில் பல ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் சமூகத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடியும். திருமண வாழ்வில் ஈடுபடவும் கணவன் குழந்தைகள் குடும்பம் என்பதனுள் தம்மை ஈடுபடுத்த இளம் பெண்கள் விரும்பிய போதும் அவ்வாறு செயற்படுவதற்குச் சீதனம் என்ற அவமானகரமான முறையானது தடையாகவே இப்பிரதேசத்தில் இருந்து வருகிறது.

ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்திய குடும்பம் ஒன்றில் தம்பதிகளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆணும் உள்ளனர்.. தந்தைக்கு அளவான வருமானம். பதினேழு வயதான தமது மூத்த ஆண் பிள்ளையின் கல்வியை நிறுத்தி ஐரோப்பிய நாட்டில் வசிக்கும் தமது நெருங்கிய உறவினர் மூலம் அங்கு அனுப்பி வைத்துள்ளனர். தமது இரண்டு பெண்பிள்ளைகளுக்கு சீதனம் கொடுக்க வேண்டி வரும் என்பதால் தமது ஒரே மகனின் கல்வியை நிறுத்திப் தொழிலுக்கு வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளனர். இது போன்ற பல குடும்பங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ளனர்.

ஒரு பெண் கல்வி கற்று அரசாங்கத் தொழில் பெற்று மாதாந்தம் நிரந்தர வருமானம் பெறுபவராக இருந்தும் கூட அப் பெண்ணுக்கு சீதனம் வழங்கும் வழமை இப்பிரதேசத்தில் உள்ளது. அவ்வாறு ஆண் வீட்டார் கேட்டும் சீதனத்தை கடன்பட்டுக் கொடுத்து தமது பெண்ணைக் கரைசேர்க்கும் பெற்றோர் அக்கடனுக்குத் தமது ஆண் மகனைப் பொறுப்பாக்குவதுடன் அதே மகனுக்குப் பெண் பார்க்கும் போது தாம் மகளுக்குக் கொடுத்த அளவையும் விடக் கூடுதலாகச் சீதனம் பெற்றுக் கொள்ளவும் முன் நிற்கின்றனர். எனவே சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சுழல் வட்டத்தில் தொடர்கிறது. இதனால் ஏற்படும் துன்ப துயரங்கள் பாதிப்புக்கள் யாவும் ஒட்டு மொத்த சமூக நோயாக இப்பிரதேசத்தில் தொடர்கின்றது.

திருமணத்தின் போது செலவு செய்து சீதனம் வழங்குவதால் பெண்குடும்பத்தார் பின்பு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்றனர். ஆய்வுப்பிரதேசத்தில் அவர்களுள் வீடு இழந்தமை 34மூ, வயல், தோட்டம் இழந்தமை 36மூ, வாகனங்கள் இழந்தமை 78மூ, ஏனைய பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டமை 89மூ கடன் சுமைக்குள் தள்ளப்பட்டமை 95மூ ஆகும்.




அட்டவணை 4

**1.7 ஆய்வின் முடிவுரை:**

சமூகத்தில் விதிக்கப்படாத வழமையே சீதனம். சீதனம் திருமணத்தின் போது மாப்பிள்ளைக்கு பெண் வீட்டாரால் வழங்கப்படும் சொத்து. இது பணமாகவோ பொருளாகவோ வீடு, நிலங்களாகவோ அல்லது இவை யாவும் இணைந்ததாகவோ கொடுக்கப்படுகின்றது. பண்டையகாலத்தில் திருமணத்தின் போது தமது பிள்ளைகள் பொருளாதாரச் சிக்கலின்றி வாழப் பெற்றோரால் தமது சொத்துக்களில் இருந்து ஒரு பகுதி சீதனமாக வழங்கப்பட்டது. அது ஆணினதோ, பெண்ணினதோ பெற்றோராக இருக்கமுடியும். ஆனால் காலப் போக்கில் பெண்ணின் பெற்றோரே ஆணுக்கு சொத்துக்களை வழங்கும் நடைமுறை விருத்தியடைந்தது. சமூகவியல் நோக்கில் இது ஆண் வர்க்கத்தினரின் அடக்கியாளும் இயல்பின் ஒருவடிவமாகவே நோக்கப்படுகின்றது. எனவே பெண்களே இச்சீதனம் எனும் வழமையினால் பெரிதும் பாதிக்கப்படும் வர்க்கமாக உள்ளனர்.

இந்துக்களின் திருமண நடைமுறைகளில் சீதனம் வழங்குதல் முக்கியமானதொரு நிகழ்வாகவே கருதப்படுகின்றது. ஆனால் இந்து மத மூல இலக்கியங்கள் எவற்றிலும் சீதனம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. காலத்திற்கு காலம் மனிதர்கள் தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே சீதனம் எனும் வரன்முறையை அமைத்துக் கொண்டனர். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை சீதனம் வழங்குதல் பெரும்பாலான இடங்களில் இடம் பெற்று வருகின்றது. இங்கு இந்துக்களின் திருமணங்களில் இச்சீதனம் வழங்கும் நிகழ்வு அவர்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

சீதன முறைமையை தமிழர்களிடையே பின்பற்றப்பட்டு வரும் தேசவழமைச் சட்டம் வலுவாக்கி நிற்கிறது. அத்துடன் மதம், பண்பாடு, மரபு, வழமை, குடும்பக் கௌரவம் என்பனவும் சீதன முறைமையைச் செழுமைப்படுத்தி நிற்கின்றன. ஊடகங்கள் எதுவுமே இச் சமூகப் பிற்போக்குத்தனம் அல்லது பெண்கள் மீதான அநீதி பற்றிக் கேள்வி எழுப்பிக் கொள்வதில்லை. இன்றும் தமிழ் ஆங்கில ஊடகங்களில் திருமணப் பந்தம் தேடும் விளம்பரங்களில் சாதி பற்றித் தவறாது குறிப்பிடப் படுவதுடன் சீதனம் பேசித் தீர்க்கப்படும் அல்லது தகுந்த சீதனம் வழங்கப்படும் என்றே வாராந்தம் வந்து கொண்டிருக்கிறது.

பணம் படைத்தோர் சீதனம் ஊடாக தமது சமூக அந்தஸ்து பேணும் நடைமுறையால் முழு மக்களையும் பின்பற்ற வைக்கின்றனர். அவை மேலிருந்து கீழே புகுத்தப்படுகின்றன. மேலே பார்த்து அவ்வாறே பின்பற்றப்படுவது நிலவுடைமைச் சிந்தனை மரபில் இருந்து பெறப்பட்ட ஒரு நடைமுறையாகும். நடை, உடை, பாவனை, பேசும் தொனி, பார்க்கும் பார்வை, சடங்குகள், கிரிகைகள் யாவும் மேலிருந்தே கீழ் இறக்கம் பெறுகின்றன. அவற்றை நமது பண்பாடு என்றவாறு பரப்பப்படுகிறது. இதனால் சாதாரண மக்கள் மத்தியில் சிறு அளவு பொருளாதார வசதி பெறுவோர் தமக்கான மேநிலையாக்கமாகவும் கொள்கின்றனர். அதாவது பார்த்தொழுகுதல்கள் இடம்பெறுகின்றன.

பெண் ஒடுக்குமுறையின் ஒரு அம்சமாகக் காணப்படுவது சீதனமாகும். இச் சீதன முறையை ஒழிப்பதற்குரிய சமூக விழிப்புணர்வை மாற்றுக் கருத்துப் பிரசாரத்தின் மூலம் முன்னெடுக்க வேண்டும். சீதனம் கொடுப்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை என்பது நடைமுறையாக்கம் பெறும் வகையில் பரந்து பட்ட இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உயர்வர்க்கக் குடும்பங்களில் சீதனம் ஒரு சமூக அந்தஸ்தாகவும் தனிச் சொத்துடமை பேணுதலாகவும் சொத்து விரிவாக்கமாகவும் முன்னெடுக்கப்படுகிறது. அதுவே சாதாரண உழைக்கும் மக்களுக்கு உடைக்க முடியாத விலங்காக இருந்து வருகின்றது. இதனை மாற்றியமைக்க பெண்கள் மட்டுமன்றி சமூக அக்கறை மிக்க ஆண்களும் மாற்றுக் கருத்துக்களை அறிவியல் பூர்வமாக முன்வைக்க வேண்டும்.

சீதனம் குடும்பங்களுக்கிடையிலான ஒன்றுபட்ட நடத்தை முறைக்கு எதிரானது. குடும்பத்தினை அங்கமாகக் கொண்டிருக்கும் சமூகங்களுக்கிடையிலும் சீதனம் பெரும் பிணக்கை ஏற்படுத்தி நிற்கின்றது. சீதனம் பற்றிய ஆய்வும் அது பற்றி முன் வைக்கப்படுகின்ற ஆலோசனைகளும் தீர்வுகளும் தனிக்குடும்பத்தின் இணக்கத்திற்கு மாத்திரமன்றி முழுச் சமூகத்திற்குமிடையிலான இணக்கப்பாட்டிற்கும் பெரிதும் வழிகோலும்.

**அடிக்குறிப்புகள்**

1. பரமசிவன்,தொ., 2014, தாலியின் சரித்திரம், ப.16
2. தமிழர் திருமணம், ப.103
3. மே.கூ.நூ., ப.48
4. ஆய்வாளர் அவதானம்
5. அகம்: 54
6. புறம்: 77
7. அகம்: 54
8. புறம்: 374
9. பெரியபுராணச் செய்யுள்
10. பரமசிவன்,தொ., 2014, தாலியின் சரித்திரம், ப.16
11. கந்தபுராணச் செய்யுள்
12. திருவிளையாடற்புராணம்: 784
13. பேரூர்ப்புராணம்:127
14. மே.கூ.நூ:110